**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 207/2021
Prosecution side witness for P.W.13

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. பெர்னாட் சேவியர்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.02.2026**

A1, A2 are absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது தென்காசி மாவட்டம், மாவட்ட குற்ற ஆவண காப்பகத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021 ஆம் வருடம் தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 02.03.2021 ஆம் தேதி சாத்தான்குளம் காவல்நிலைய தலைமை காவலர் 1797 திருமதி. ஜெயந்தி என்பவர் பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்திருந்ததை நிலையத்தில் வைத்து பெற்றுக்கொண்டு வழக்கில் சம்பவ இடமான கீழ அம்பலசேரி ஆர்சி கோவில் காம்பவுண்ட் வளாகத்திற்கு 03.03.2021 அன்று காலை 7.00 மணிக்கு சென்று சாட்சிகள் வெஸ்லி புருஷோத்தம்மன், கல்லான்டன் ஆகியோர்கள் முன்னிலையில் அதன் சுற்றுப்புறங்களையும் நாலாபுறமும் பார்வையிட்டு பார்வைமகசர், வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வைமகசர் என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அ.சா.ஆ-2 தான். நான் தயார் செய்த மாதிரிவரைபடம்

நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படுவது **அ.சா.ஆ– 12** ஆகும். பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 8.00 மணிக்கு சம்பவ இடத்திலிருந்த இரத்தக்கறை படிந்த மண் கொஞ்சம், இரத்தக்கறை படியாத மண் கொஞ்சம் ஆகியவற்றை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். பின்னர் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் சின்னப்பா, கல்லான்டன் பெருமாள், லெட்சுமணபெருமாள், வெங்கடாசலம், சிவபெருமாள் மற்றும் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் திருமதி.ஜெயந்தி ஆகியோர்களையும், பார்வைமகசர் சாட்சிகளான வெஸ்லி புருஷோத்தம்மன், கல்லான்டன் ஆகியோர்களையும் தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன்.

பின்னர் அன்றையதினம் 9.00 மணிக்கு சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு வந்து அங்கு பிணவறையில் வைக்கப்பட்டிருந்த இவ்வழக்கில் இறந்துபோன கணேசன் என்பவரது பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். பின்னர் அன்றையதினம் 11.00 மணிக்கு பிரேத விசாரணையை முடித்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அதற்கான பிரேத விசாரணை அறிக்கை நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படுவது **அ.சா.ஆ– 13** ஆகும். பின்னர் பிரேதவிசாரணை முடிந்தபின்னர் பிரேதத்தின் இறப்பிற்கான மருத்துவ ரீதியான காரணம் அறியும்பொருட்டு பிரேத பரிசோதனை செய்ய வேண்டி காவலர் 4636 பால்பாண்டி என்பவர் மூலம் கடவுச்சீட்டு மற்றும் பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிரேத பரிசோதனை முடித்து வர தக்க அறிவுரை வழங்கினேன். பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்திலிருந்து மருத்துவரால் வெட்டியெடுத்து பிரேத பரிசோதனை காவலரிடம்

ஒப்படைத்ததை அவர் என்னிடம் நிலையத்தில் ஆஜர் செய்ததை படிவம் 91 மூலம் கைப்பற்றிக்கொண்டேன். சாட்சிகள், பஞ்சாயத்தார் கூறியதன் அடிப்படையில் சம்பவம் உண்மையென தெரியவருவதால் எதிரிகளை தேடி வந்த நிலையில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி 03.03.2021 ஆம் தேதி 19.00 மணிக்கு ஸ்ரீவைகுண்டம் கால்வாய் விலக்கின் அருகில் பாறைகள் நிறைந்த மறைவான பகுதியில் மறைந்திருந்த இவ்வழக்கின் 1ம் எதிரியான ராமர் என்பவரை காரணம் கூறி கைது செய்தும், பின்னர் அன்றையதினம் 20.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய பதிவேடுகளில் பதிவு செய்து உச்சநீதிமன்ற அறிவுரையை பின்பற்றி இரவு நேரமாக இருந்ததால் எதிரியை பாராவில் ஒப்படைத்தேன்.

பின்னர் அன்றையதினம் 20.30 மணிக்கு சாட்சிகள் ராமராஜ், மூக்கன் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரியை எவ்வித அச்சுறுத்தலோ, ஆசைவார்த்தையோ, துன்புறுத்தலோயின்றி விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 1ம் எதிரி ராமர் சம்பவத்திற்கு பயன்படுத்திய பைக்கையும், கணேசனை வெட்டிய அரிவாளையும் மறைத்து வைத்திருக்கும் இடத்திலிருந்து அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்வதாக கூறியதன்பேரில் இரவு நேரமாக இருந்ததால் எதிரியை உச்சநீதிமன்ற நிபந்தனையை கடைபிடித்து எதிரி உணவு உறைவிடம்கொடுத்து நிலைய பாராவில் பாதுகாப்பில் வைத்துவிட்டு, 04.03.2021 ஆம் தேதி காலை 7.45 மணிக்கு சாட்சிகள் மற்றும் எதிரியுடன் கீழ அம்பலச்சேரி சுடுகாடு பக்கம் உள்ள முட்புதரிலிருந்து அடையாளம் காட்டி எடுத்து ஆஜர்செய்த 50 செ.மீ நீளமுள்ள வெட்டருவாளை அதே சாட்சிகள் முன்பு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். அதற்கான அத்தாட்சி நீதிமன்றத்தில் என்னிடம்

காண்பிக்கப்படுவது அ.சா.ஆ–4 தான். 1ம் எதிரி ராமர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படுவது அ.சா.ஆ–5 தான். பைக்கை தனது உறவினர் வீடான முருகேசன் வீட்டில் விட்டிருப்பதாக சொன்னார். அவர் வீட்டில் இல்லாத காரணத்தினால் அன்றையதினம் சம்பவத்திற்கு பயன்படுத்திய பைக்கை கைப்பற்ற முடியவில்லை. பின்னர் எதிரி மற்றும் சொத்துக்கள் சகிதம் நிலையம் வந்து நிலைய ஆவணங்களில் பதிவு செய்து சொத்துக்களுக்கு படிவம் 91 தயார் செய்தும், எதிரி மற்றும் சொத்துக்களை தக்க வழிக்காவல் மற்றும் படிவம் 91 மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அதற்கான படிவம் 91 நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படுவது **அ.சா.ஆ– 14 வரிசை (3 எண்ணம்)** ஆகும். அந்த பொருட்கள் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அ.சா.பொ.1,2,3 மற்றும் 6,7 ஆகும். பின்னர் சாட்சிகள் ராமராஜ், மூக்கன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன்.

பின்னர் 05.03.2021 ஆம் தேதி சாட்சிகள் பிராட்டி, வடிவு, சின்னப்பா, காவலர்கள் பால்பாண்டி, மற்றும் பாண்டிராஜன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன். பின்னர் சாட்சிகள் சின்னப்பா, மற்றும் கல்லான்ட பெருமாள் ஆகியோர்களை மீண்டுமாக விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன். பின்னர் மற்றொரு எதிரியான கண்ணன் என்பவரை தேடி வந்தநிலையிலும், தடய சொத்துக்களை தேடி வந்தநிலையிலும், 11.04.2021 ஆம் தேதி இந்த வழக்கில் கொலை சம்பவத்திற்கு எதிரிகள் பயன்படுத்திய இருசக்கரவாகனமான TN92 C 4632 என்ற பதிவெண் கொண்ட கருப்பு சிவப்பு நிற பல்சர் பைக் ஒன்றை அதன் உரிமையாளரான முருகேசன் அவரால் நிலையத்தில் ஆஜர் செய்யப்பட்டதை முருகேசன்

மற்றும் முத்துசங்கர் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். அதற்கான அத்தாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அ.சா.ஆ–6 தான். பின்னர் சாட்சிகள் முருகேசன் மற்றும் முத்துசங்கர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துகொண்டேன். பின்னர் கைப்பற்றப்பட்ட இருசக்கரவாகனத்தை படிவம் 91 மூலம் நீதிமன்ற பாதுகாப்பிற்கு அனுப்பினேன். அதற்கான படிவம் 91 நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படுவது **அ.சா.ஆ– 15** ஆகும். அந்த இருசக்கரவாகனம் அ.சா.பொ. 5 ஆக குறியீடு செய்யப்பட்டதுதான். பின்னர் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தடய சொத்துக்களான அரிவாள், இரத்தக்கறை படிந்த மண், இரத்தக்கறை படியாத மண், பிரேதத்திலிருந்து கைப்பற்றப்பட்ட இரத்தக்கறை படிந்த ஆடைகள் ஆகியவற்றை இரசாயன பரிசோதனைக்கு அனுப்பி வைக்குமாறு 13.05.2021 ஆம் தேதி சாத்தான்குளம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு காவலர் பாண்டியராஜன் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அதற்கான வேண்டுகோள் கடிதம் நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படுவது **அ.சா.ஆ– 16** ஆகும். அதற்கான நீதிமன்ற உத்தரவு கடிதம் நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படுவது **அ.சா.ஆ–17** ஆகும். பின்னர் 02.06.2021 ஆம் தேதி இறந்துபோன கணேசனை பிரேத பரிசோதனை செய்த சாத்தான்குளம் அரசு மருத்துவமனையின் அரசுமருத்துவர் திரு.நவநீதபிரபு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் வழங்கிய பிரேத பரிசோதனை சான்றுபெற்றேன். அதற்கான பிரேத பரிசோதனை சான்று நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்பம் அ.சா.ஆ–13 தான்.

பின்னர் 17.06.2021 ஆம் தேதி கன்னியாகுமரி மாவட்டத்திற்கு பணிமாறுதல் வந்து விட்டபடியால் இந்த வழக்குகோப்பினை தொடர்புலன்விசாரணைக்காக காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன்.

(எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு அளித்தும் குறுக்குவிசாரணை செய்யாததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District & Sessions Judge,
Thoothukudi.